**Dated : 20.08.2025**

**O.S.No. 54/2017**

**DW.1 – திரு. சுரேஷ்குமார்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

வாதி கொடுத்த ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக சொல்லியிருக்கிறேன், ஆனால் அதுபோல் எந்த ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் என் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். உண்மையிலேயே நான் பணம் கொடுத்திருந்தால் அது சம்மந்தமாக எழுதி வாங்கியிருப்பேன் என்றால் நம்பிக்கையின் பேரில் அவர் Cancel செய்து தருவதாக தெரிவித்ததினால் நான் எழுதி வாங்கிக்கொள்ளவில்லை. பாலக்கோடு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விவரமும், இந்த நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கும் வெவ்வேறானது என்றால் இரண்டும் ஒன்று தான். நானும், எனது சகோதரரும் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால் நானும், எனது சகோாதரர்கள் மட்டும் சகோதரிகள் ஆகியோர்கள் சூரிட்டிக்காக மட்டும் தான் கொடுத்தேன். நான் தற்போது நீதிமன்றத்தில் கூறும் விவரங்களை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நானும் எனது சகோதரர்களும் சூரிட்டியாக தான் சொத்துக்களை கொடுத்தோம் என்று கூறியுள்ள விவரத்தினை பொருத்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தோமா என்றால் அவர் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம், சொத்துக்களை மாற்றி கொடுத்துவிடுகிறேன் என்று தெரிவித்தார்.

சொத்துக்களை விற்பதாக சொல்லி தான் ஆவணம் எழுதிக்கொடுத்தோம் என்றால் தவறு, கடன் தான் வாங்கினோம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், மற்ற பிரதிவாதிகளும் மொத்த கிரய தொகையாக ரூ.21,20,250/– என்று நிர்ணயம் செய்துக்கொண்டு முன்பணமாக ரூ.17,00,000/– பெற்றுக்கொண்டோம் மீதமுள்ள தொகையான ரூ.4,20,250/–ஐ கிரயம் செய்து கொடுக்கும் போது கொடுத்துவிடுவதாக கூறினோம் என்றால் சரியல்ல. ரூ.4,20,250/–ஐ பெற்றுக்கொண்டு பத்திரம் பதிவு செய்து கொடுப்பதாக தெரிவித்தோம் என்றால் சரியல்ல. கிரயம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு, தற்போது அதை மறுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பணத்தை ஏமாற்றும் நோக்கத்தோடு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் நான் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல, நான் வெளியூரில் வேலையில் இருந்தேன்.

"என்னுடைய எதிர் வழக்குரையில் ஊர் வழக்கப்படி கடன் நடவடிக்கைக்காக சொத்தை அடமானம், கிரய உடன்படிக்கை, காசோலை, புரோநோட்டுக்கள் எழுதி கொடுப்பது வாடிக்கை அதன் படி தான் பிரதிவாதிகள் தாவா சொத்து கடன் நடவடிக்கைக்காக எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சொத்தை ரத்து செய்து கொடுக்கும் போது நான் புரோ நோட்டுக்களை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று நம்பிக்கை கொடுத்தார்". சொத்து கிரயம் செய்துக்கொள்வதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல, அடமானத்திற்கு தான் ஒப்புக்கொண்டோம். "என்னுடைய எதிர் வழக்குரையின் படி கடந்த மார்ச் 14ம் தேதி ரூ.5,00,000/– பணம் அவசரமாக தேவைப்பட்டதால் நில புரோக்கர் ராஜா மூலமாக இந்த 2ம் பிரதிவாதிக்கு தெரிந்தவர் என்ற முறையில் ரூ.5,00,000/– மாதம் ஒன்றிற்கு ரூ.2/– வட்டி வீதம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, ரூ.5,00,000/– கடன் பிரதிவாதிகள் வாங்கினார்கள் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல". 07.03.2014 தேதியன்று தாவா சொத்தை அடமானம் எழுதிக்கொடுத்துவிட்டார்கள், அப்போது வாதியானவர் பிரதிவாதிகளிடம் தலா ஒரு வெற்று பாண்டு பத்திரத்தில் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டார், அதுமட்டுமல்லாமல் 2ம் பிரதிவாதியிடம் ஹாக்சிஸ் வங்கி காசோலைகளையும் வாங்கிக்கொண்டு 5ம் பிரதிவாதியிடம் ஒரு வெற்று புரோநோட்டிலும் கையொப்பம் வாங்கிக்கொண்டு கடன் கொடுத்தார், அந்த கடன் தொகையை மாதா மாதம் வட்டி நிலுவையின்றி பிரதிவாதிகள் திருப்பி செலுத்தினார்கள் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் வாதியின் வங்கி கணக்கில் பணம் போட்டும், நேரடியாக கையிலும் பணத்தை கொடுத்துள்ளார்கள், அவ்வாறு பிரதிவாதிகள் கடன் தொகை முழுவதுமாக 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் செலுத்திய பின் வாதியானவர் கணக்கு வழக்கு பார்த்துவிட்டு, அடமான பத்திரத்தை ரத்து செய்ததாகவும் வெற்று ஆவணங்களையும், வெற்று காசேலைகளையும் திருப்பி தருவதாக கூறினார், அப்படியாயின் வங்கி கணக்கிலும் பணம் போட்டதாகவும், கையிலும் பணம் கொடுத்ததாகவும் சொல்கிறார், அப்படியாயின் வங்கியில் பணம் போட்டதற்காக எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை, பத்திரத்தை ரத்து செய்வதாகவும், அப்போது வெற்று ஆவணங்களையும், வெற்று காசோலைகளையும் திருப்பி தந்துவிடுவதாக கூறியதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நம்பிக்கையின் பேரில் எழுதி வாங்கவில்லை. நான் பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் பொய் என்றால் சரியல்ல. என்னுடைய பதிலுரையில் 4வது பக்கம், 6வது பத்தியில் தாவா சொத்தை பொருத்து செக்யூரிடிக்காக எழுதிக்கொடுத்த ஆவணத்தை ரத்து செய்து கொடுப்பதாக வாதி கால அவகாசம்

கேட்டு வந்ததால், பிரதிவாதிகள் அசலையும், வட்டியையும் ஏற்கனவே கொடுத்துவிட்டதால் ஆவணத்தை ரத்து செய்துவிடுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், சுத்த கிரயம் வாங்கும் நம்பிக்கையில் தான் வாதி செயல்பட்டார் என்றால் சரியல்ல.

நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்த பிறகு தான் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக ஆவணம் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரம் தெரிய வந்தது என்று நான் சொல்லியுள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. வாதி ரூ.17,00,000/– பணம் கொடுக்கும் அளவிற்கு அவர் வசதியுடையவர் அல்ல என்று நான் சொல்லியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. வாதி தரப்பில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வீட்டில் யாரும் இல்லாததால் திருப்பப்பட்டது என்று நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சட்ட அறிவிப்பை அனுப்பி ஒரு வருடத்திற்கு மேல் நான் ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தேன் என்றால் சமாதான பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்த காரணத்தினால் தான். அப்படி என்றால் ஏன் உடனடியாக வழக்கினை போடவில்லை என்றால் நம்பிக்கையின் பேரில் வழக்கு போடவில்லை. ஏற்கனவே வாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுவிட்டு, இடைப்பட்ட காலத்தில் சொத்தினுடைய விலை ஏற்றத்தின் காரணமாக தற்போது அக்ரிமெண்ட் ஏற்படுத்திக்கொண்டதாக சொல்வது தவறு, கடனாக தான் பணம் வாங்கினோம் என்று பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வாதியிடமிருந்து கிரய பணம் பெற்றுக்கொண்டு, கிரய ஒப்பந்தம் தான் மேற்கொண்டோம் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.